அம்பேத்கரியலை இலட்சியமாக ஏற்றுக்கொண்டுள்ள நான் அதை சமுதாயத்தில்
பிரச்சாரம் செய்வதோடு நின்றுவிடாமல் எனது சொந்த வாழ்க்கையிலும்
பின்பற்றுவேன் என்று உறுதி ஏற்கிறேன்

தீண்டாமை மற்றும் சாதிய ஏற்றத்தாழ்வுகளிலிருந்து முழுமையாக
விடுவித்துக்கொண்டு சாதி மத மறுப்பாளனாக வாழ்ந்து காட்டுவேன் என்றும்

எனது குடும்பத்தில் சாதி மறுப்புத்திருமணங்களாகவே நடத்த முழுமையாக
முயற்சிப்பேன் என்றும்

ஆதித்தமிழர் விடுதலையிலும் பெண்களுக்கு சம உரிமை வழங்குவதிலும்
வர்க்கமற்ற சமுதாயம் அமைப்பதிலும் சொல்லொன்று செயலொன்று என்று இல்லாமல்
உண்மையாக நடந்து கொள்வேன் என்றும்

உதட்டளவில் சாதி எதிர்ப்புப் பேசிக்கொண்டு உள்ளத்தில் சாதியவாதியாக
இருக்கும் எவரொருவரும் அம்பேத்கரியலுக்கே எதிரானவர்கள் என்று கருதி
வெறுப்பேன் என்றும் உறுதி ஏற்கிறேன்

ஒழியட்டும் சாதிய அமைப்பு!
மடியட்டும் பெண்ணடிமை!!
மலரட்டும் சமத்துவ சமுதாயம்!!
வெல்லட்டும் அம்பேத்கரிய பண்பாட்டுப் புரட்சி!!!